## 6.20 நகர குடிநீர் திட்டங்கள் நகர உள்ளாட்சி அமைப்பு மற்றும் குடிநீர் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை

அரசாணை (நிலை) எண். 51 நாள் : 9.3.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 721, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.7.1990
2. அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் (நப3) துறை, நாள். 26.10.1998
3. அரசாணை (2டி) எண். 19. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 3.3.1999.
4. அரசு கடித எண். 11549/நப/399 – 1, நாள். 12.4.1999.
5. அரசாணை (2டி) எண். 38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 9.3.2000.

**ஆணை :**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தினை அடுத்து நகரக் குடிநீர் திட்டங்கள் ஒரு சில வரையறைகளுக்கு உட்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தாங்களாகவோ அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ செயல்படுத்தப்பட்டலாம். ஊரகக் குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரை திட்டங்களின் தேர்வு, செயலாக்கம் போன்றவை பற்றிய வரையறைகள் ஏற்கனவே உள்ளன. ஆனால் நகர குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரை இதுபோன்ற அடிப்படை வரையறைகள் இதுவரையிலும் வகுக்கப்படவில்லை. இருப்பினும், கடந்த சில ஆண்டுகளில் நகர குடிநீர் திட்டங்கள் தொடர்பாக இக்குடிநீர் திட்டங்களுக்கென மானிய ஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்க வேண்டிய குடிநீர் கட்டணங்கள், வைப்புத் தொகைகள் அரசு வழங்க வேண்டிய மான்யம் குறித்து முடிவெடுக்க மான்யக் குழு அமைத்தல் மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள் பெற்ற கடனை திரும்ப பெறுதல் போன்றவை தொடர்பாக அரசு தனித் தனியாக மேலே சொல்லப்பட்ட பல்வேறு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

2. குடிநீர் திட்டங்களை, மக்களின் தேவைக்கேற்ப திட்டங்கள் வகுத்து அவைகளை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்து அவைகளை மக்களின் உடனடி பயன்பாட்டிற்கு கொண்டுவர கடந்த காலங்களில் நகர குடிநீர்த் திட்டங்கள் தொடர்பாக வெளியிட்ட ஆணைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு பொதுவான வழிமுறைகளை (Norms) வெளியிடுவது பற்றி அரசு ஆய்வு செய்தது. இந்த ஆய்வின் அடிப்படையில், குடிநீர்த் திட்டங்களுக்கான நகரங்களை தெரிவு செய்தல் மற்றும் செயலாக்க அமைப்பை முடிவு செய்தல், திட்டங்களை உள்ளாட்சி அமைப்பே செயல்படுத்தும் போதும் அல்லது குடிநீர் வாரியமே செயல்படுத்தும் போதும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் திட்டத்திற்கு அரசு வழங்க வேண்டிய மான்ய அளவு மற்றும் இதர நிறுவனத்திடமிருந்து கடன் பெறுதல், திட்ட கணக்குகள் பராமரித்தல் மற்றும் இத்திட்டம் முடிந்ததும் அதைமேற்கொண்டு பராமரிப்பது தொடர்பாக சில அறிவுரைகளை தொகுத்து வழங்கலாம் என அரசு முடிவெடுத்தது. இந்த முடிவின் அடிப்படையில் நகரக் குடிநீர்த் திட்டங்களை வகுத்து அதை சீரிய முறையில் செயல்படுத்தி பராமரிக்க கீழ்க்கண்ட நெறிமுறைகளை வகுத்து அரசு ஆணையிடுகிறது.

(1) நகரங்களைத் தெரிவு செய்தல் மற்றும் செயலாக்க அமைப்பை முடிவு செய்தல்:

நகர உள்ளாட்சி அமைப்புகளாக தமிழ்நாட்டில் 102 நகராட்சிகள் , 611 நகர பேரூராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) உள்ளன. மத்திய அரசு வகுத்து, தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கொள்கையின்படி, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு பேரூராட்சிகளில் 70 லிட்டரும், நகராட்சிகளில் 90 லிட்டரும், மாநகராட்சிகளில் 120 லிட்டரும், பெருநகர மாநகராட்சிகளில் 140–170 லிட்டர் வரை குடிநீர் அளிக்கப்பட வேண்டும்.

## 6. பேரூராட்சிகளின் பணிகள்

**(1)** நகரங்களைத் தெரிவு செய்தல் மற்றும் செயலாக்க அமைப்பை முடிவு செய்தல் :

நகர உள்ளாட்சி அமைப்புகளாக தமிழ்நாட்டில் 102 நகராட்சிகள், 611 நகர பேரூராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) உள்ளன. மத்திய அரசு வகுத்து, தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கொள்கையின்படி, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு பேரூராட்சிகளில் 70 லிட்டரும், நகராட்சிகளில் 90 லிட்டரும், மாநகராட்சிகளில் 120 லிட்டரும், பெருநகர மாநகராட்சிகளில் 140–170 லிட்டர் வரை குடிநீர் அளிக்கப்பட வேண்டும். இதனடிப்படையில், தமிழ்நாட்டில் 14,200 அன்றுள்ள நிலவரப்படி 22 நகராட்சிகளிலும், 205 பேரூராட்சிகளிலுமே இந்த அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சிகளைப் பொறுத்தவரை 41 நகராட்சிகளில் 50–89 லிட்டர் வரையிலும் 39 நகராட்சிகளில் 50 லிட்டருக்கு குறைவாகவும் 222 நகர பேரூராட்சிகளில் 40–60 லிட்டர் வரையிலும் 184 நகரப் பேரூராட்சிகளில் 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இதனை கருத்தில் கொண்டு அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களை பொறுத்தவரை முதற்கட்டமாக 50 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெற்றுவரும் நகராட்சிகள் மற்றும் நகர பேரூராட்சிகளைத் தெரிவு செய்ய வேண்டும். இரண்டாம் கட்டமாக 50 லிட்டருக்கு மேலும் 70 லிட்டருக்கும் குறைவாகவும் குடிநீர் பெற்றுவரும் நகராட்சிகள் மற்றும் நகரப் பேரூராட்சிகளை தேர்வு செய்யலாம்.

(அ) ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30–ஆம் தேதிக்குள் அடுத்து வரும் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நகரங்களை மேலே குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் வாரியத்தையும் கலந்தாலோசித்து தெரிவு செய்ய வேண்டும்.

(ஆ) நகரங்களைத் தெரிவு செய்யும்போது, நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் ஆணையர் மற்றும் செயல் அலுவலர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

(இ) குடிநீர் திட்டத்தினை செயல்படுத்துவற்கு மன்ற ஒப்புதல் தீர்மானமும் பெற வேண்டும்.

(ஈ) மேற்படி குடிநீர் திட்டத்தினை உள்ளாட்சி அமைப்பே செய்து கொள்ளுமா அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்த வேண்டுமா என்கிற விவரத்திற்கு நகர் மன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(உ) மேற்கண்ட விவரங்களுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் அரசின் முன் அனுமதி பெறுவதற்கான முன் மொழிவினை இணைப்பு 1–ல் உள்ள விவரங்களுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(ஊ) அரசின் முன் அனுமதியினை அதாவது கொள்கை அளவிலான ஆணையை ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்திற்குள் பெற வேண்டும்.

**(2)** வாரியம் மூலமாக செயலாக்கப்படும் குடிநீர் திட்டங்கள்:

(I) விரிவான மதிப்பீடு தயாரித்தல்

(அ) அரசின் முன் அனுமதி ஆணை பெற்ற பின் நீராதாரம் கண்டுபிடித்தல், சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் இடம், பிரதானக் குழாயினை எடுத்துச் செல்லும் வழி, நீரேற்று நிலையங்கள் அமைக்கும் இடம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் இடங்கள், குடிநீர் விநியோகக் குழாய் பதிக்கும் தெருக்கள், பொதுக்குழாய் அமைக்கும் இடம் ஆகியவைகளைப் பற்றிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) இதனடிப்படையில் திட்டத்திற்கான வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் விரிவான மதிப்பீடு போன்ற திட்ட ஆவணங்கள் தயாரித்து திட்டத்திற்கான விலை விவரப்பட்டியல் (BOQ) தயாரிக்கப்பட வேண்டும்.

(இ) மேற்கண்ட ஆய்வு, திட்ட ஆவணங்கள் தயாரித்தல், விலை விவரப்பட்டியல் தயாரித்தல் ஆகியவற்றை கலந்தாலோசகர் (Consultant) மூலமாகவும் செய்யலாம்.

(ஈ) இந்த முதற்கட்ட பணிகளை செய்ய தமிழ்நாடு குடிநீர் வாரியம், அரசு இதற்காக அரசு ஆணை நிலை எண். 721, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 31.7.90–ல் ஏற்படுத்தியுள்ள தொகுப்பு நிதியை (Corpus Fund) பயன்படுத்தி பிறகு, திட்டம் செயல்படுத்தப்பட்டால் திட்டச் செலவினில் இத்தொகை சேர்க்கப்பட வேண்டும்.

(உ) விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும்பொழுது, திட்டத்திற்குத் தேவையான அனைத்து நிலங்களும் தயாகராக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஊ) விரிவான மதிப்பீட்டிற்கு வாரியத்தின் மண்டல தொழில் நுட்பக் குழு / மாநில தொழில் நுட்பக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(எ) ஒரு குடிநீர் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு முன் அத்திட்டத்திற்கான நீராதாரம் கண்டுபிடிக்கப்பட்டு, நீரின் தன்மை (Quality), மற்றும் அளவு ஆகியவை ஏற்கக்கூடியதாகவும், போதுமானதாகவும் இருக்கிறதா என்பது பற்றி பொறியாளர்கள் தங்களை திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான பொறுப்பினை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளரே ஏற்க வேண்டும்.

(II) திட்டத்திற்கான மான்யம் நிர்ணயம் செய்தல்

எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் குடிநீர்த் திட்டத்திற்கான நிதி ஆதாரம் மிகவும் முக்கியமானதாகும். உள்ளாட்சி அமைப்புகளில் வசூல் செய்ய வேண்டிய புதிய மாதாந்திர குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவைகளை முடிவு செய்ய திட்டச்செலவு, தேவைப்படும் அரசு மான்யம் மற்றும் இப்பகுதிகளில் புதிதாக வழங்கப்படக் கூடிய குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை ஆகியவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக, ஏற்கனவே வெளியிட்ட அரசாணை (2டி) எண். 19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள். 3.3.1999–ல் உள்ள விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் அரசு கடித எண். 11594/நதி3/99–1ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 12.4.1999–ல் உள்ள அறிவுரைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தி நிதி ஆய்வு, வாரியம் மூலமாகவோ ஆலோசனை நிறுவனங்கள் மூலமாகவோ செய்யலாம். இந்த நிதியாதார ஆய்வு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பினையும் கலந்தாலோசித்து செய்யப்பட வேண்டும். புதிய கட்டண விகிதங்கள் மற்றும் வைப்பு தொகைகளுக்கு மன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(III) மான்ய அளவை தீர்மானிப்பதற்கான வழிமுறைகள்:

எந்த ஒரு குடிநீர் திட்டத்திற்கும் தேவைப்படும் மான்யத்தின் அளவினை முடிவு செய்யும்போது மான்யக் குழு கீழ்க்கண்டவைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(அ) பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் அவர்களின் சக்திக்கேற்ப / கட்டக்கூடிய அளவில் விதிக்கப்பட வேண்டும். புதிதாக நிர்ணயிக்கப்படும் கட்டணம் நடைமுறையிலுள்ள கட்டணத்தைவிட – பல மடங்காக உயர்த்தினால் அதனை வசூல் செய்வதில் நடைமுறையில் சாத்தியமில்லாமல் ஆகிவிடும். எனவே, இதனையும் கருத்தில் கொண்டு, நடைமுறையிலுள்ள கட்டணங்களைவிட ஒரு சில மடங்கு கூடுதலாக குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யலாம். இதே முறையை, பயனீட்டாளர்களிடமிருந் வசூல் செய்யும் ஒரு தவணை வைப்புத் தொகையை முடிவு செய்வதிலும் கடைபிடிக்க வேண்டும்.

(ஆ) இவ்வாறு வசூல் செய்யும் குடிநீர்க் கட்டணம் வீட்டு உபயோகம்/வணிக உபயோகம் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவைகளுக்கு சாதாரணமாக 1:3:5 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும்.

(இ) திட்டம் முடியும் சமயத்தில் உடனடியாக புதிதாக அளிக்கக் கூடிய குழாய் இணைப்புகள் மற்றும் அடுத்து வரும் 5–10 ஆண்டுகளில் வரும் குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கையையும் தனித்தனியாக கணக்கிட வேண்டும்.

(ஈ) திட்டத்திற்கு தேவைப்படும் மூலதனச் செலவுக்கான நிதி ஆதாரத்தை கணக்கிடும்போது, இத்திட்டம் தொடர்பாக உடனடியாக பயனுக்கு வரும் புதிய இணைப்புகளுக்காக வசூல் செய்யப்படும் முன் வைப்புத் தொகையின் குறைந்தபட்சம் 50 சதவிகிதம் மட்டும் கருத்தில் கொள்ளப்படும்.

(உ) கூட்டுக் குடிநீர் திட்டங்களில் நகர மற்றும் ஊரகக் குடிநீர் திட்டங்களுக்குத் தேவையான மான்யம் அறிவியல் ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதற்கு மான்யக்குழுவின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

(IV) குடிநீர்த் திட்டங்களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தல்:

மேற்குறிப்பிட்டவைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்ட செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அரசின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும். இச்செயற்குறிப்பில் கீழ்கண்டவைகள் இருக்க வேண்டும்.

(அ) தற்போதைய குடிநீர் நிலை

(ஆ) அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் விவரங்கள்

(இ) திட்டம் சம்பந்தமான தொழில் நுட்ப விவரங்கள்

(தண்ணீர் எடுக்க இடம், அமைக்கப்படவிருக்கும் குழாய்களின் நீளம் போன்றவை)

(ஈ) திட்டத்தின் மொத்த BOQ விலை மற்றும் பிற இனங்களான நூற்றுவிகித கட்டணம், எதிர்பாரா இனங்கள் மற்றும் அவசரச் செலவு இனங்கள் போன்றவை.

(உ) இத்திட்டத்தின் நிதி ஆய்வின் அடிப்படையில் தேவையான மான்யம், நிர்ணயிக்கப்பட வேண்டிய குடிநீர் கட்டணங்கள், வைப்புத் தொகை போன்றவை.

(ஊ) திட்டத்திற்கான தேவைப்படும் நிலங்களின் விவரம் மற்றும் அவை, நகராட்சியின்/ பேரூராட்சியின் கைவசம் உள்ளது என்பதற்கான விவரங்கள் திட்டத்திற்கான குடிநீர் ஆற்றுப்படுகையிலிருந்து இருக்குமேயானால் அதற்கு தேவையான பொதுப் பணித்துறையின் அனுமதி போன்றவை.

(எ) திட்ட செயலாக்க காலம்.

(ஏ) சம்பந்தப்பட்ட நகர மன்றத்தின் தீர்மானங்கள்.

(ஐ) திட்ட செயலாக்கத்தின் மீதமுள்ள தொகை பெறுவதற்கான விவரம் அரசின் நிர்வாக அனுமதிக்கு அனுப்பப்படும் செயற்குறிப்புகள் இணைப்பு 2–ல் உள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

(V) திட்டச் செயலாக்கம்:

அரசாணை அடிப்படையில், திட்ட செயலாக்கத்திற்கு இணைப்பு – III–ல் உள்ளபடி வாரியத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளரும், உள்ளாட்சி அமைப்பின் சார்பில் சம்பந்தப்பட்ட ஆணையர் அல்லது செயல் அலுவலரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தின் நகல் வாரிய தலைமையகத்திற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட வேண்டும். இதன்பிறகு தான் அடுத்த கட்ட நடவடிக்கை வாரியத்தால் எடுக்கப்பட வேண்டும்.

அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் திட்டத்திற்கான கடன் தொகை – மான்யத்திற்கான ஆணை பெறப்பட்டு பின் நடைமுறையில் உள்ள நெறிகாட்டிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்தல்மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் ஆகியவற்றை முடிவு செய்ய வேண்டும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தபின், பணியினை உடனடியாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இத்திட்டத்திற்கான செலவு எந்த வகையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கு மேல் செல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பொறுத்தவரை இதனை உறுதி செய்வது வாரியத்தின் பொறுப்பாகும். எனவே, திட்டத்தினை ஒரு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் கண்டிப்பாக முடித்து அதனை மக்கள் பயனுக்குக் கொண்டு வர வாரியம் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்திற்கு அரசு அளித்துள்ள மான்யத் தொகை முழுவதையும் பயன்படுத்திய பின்னரே, இதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள கடன் தொகையை பெற வேண்டும். வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, திட்டத்திற்கான கடன் தொகை பெறும் முன்பு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பினை தடையின்மை சான்றிதழ் (N.O.C) வாரியத்தால் பெறப்பட்ட வேண்டும்.

திட்டத்தின் பணி முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு காலாண்டிற்கும் அதற்கான முன்னேற்ற அறிக்கை சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்புக்கும் / நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் / பேரூராட்சி இயக்குநருக்கும், வாரியம் தவறாமல் அனுப்ப வேண்டும்.

திட்டங்கள் செயலாக்க காலத்தில் அவற்றின் முன்னேற்றம், இதற்காக அரசு ஆணை (2டி) எண். 38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 9.3.2000–ல் உருவாக்கப்பட்ட நகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் தலைமையிலான குழுக்களால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(VI) திட்டத்திற்கான கடன் தொகை பெறுதல்:

திட்டங்களில் அரசு மான்யம் போக மீதமுள்ள தொகை உள்ளாட்சி அமைப்பால் கடனாகவோ தங்கள் சொந்த நிதியிலிருந்தோ பெறப்பட வேண்டும். இதற்கான மன்ற தீர்மானம் பெற்று கடனுக்கான மனுவில் மனு அளிக்கப்பட்டு கடன் பெற வேண்டும். கடன் தொகை, குடிநீர் வடிகால் வாரியமே உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக பெற ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(VII) திட்ட செயலாக்க காலத்தில் வாரியத்தால் பராமரிக்கப்பட வேண்டிய கணக்கு முறை:

நரக குடிநீர் திட்டங்கள் பெரும்பாலும் கடன் தொகை பெற்று செயலாக்கப்பட்டு வருவதாலும், இக்கடன் தொகைகள் திட்ட செயலாக்கத்திற்குப் பின்பு சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டு, அவை கடன் தொகைகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கோ, அரசுக்கோ திருப்பி அளிக்க வேண்டியுள்ளதால், திட்ட சம்பந்தமான கணக்குகளை முறையாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. திட்ட கணக்குகள் பராமரிப்பில் வாரியம் கீழ்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(அ) ஒவ்வொரு திட்டத்திற்கும் அவை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் ஒரு பிரத்தியேக கணினி எண் (Computer Code No.) கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) திட்ட சம்பந்தமான அனைத்து விவரங்களும் மொத்த செலவு, நிதி ஆதாரங்கள் போன்றவையும் பதியப்பட வேண்டும்.

(இ) திட்ட செயலாக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின் ஒவ்வொரு முறையும் அத்திட்டத்திற்காக கோட்டப் பொறியாளர்களுக்கு நிதி அளிக்கும்போதும் அவை திட்டக் கணக்கில் பதியப்படவேண்டும்.

(ஈ) ஒரு திட்டத்திற்கு மான்ய நிதி ஒதுக்கீடு இருந்தால், எக்காரணங்களைக் கொண்டும், மான்ய நிதி முழுவதுமாக செலவிடுவதற்கு முன் கடன் தொகை பெறக்கூடாது. மேலும் கடன் தொகை பெறும்போது, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு தெரியப்படுத்த வேண்டும். (கடன் தொகை, வட்டி விகிதம் போன்ற விவரம்).

(உ) ஒரு திட்டத்திற்காக பிரத்தியோகமாக ஒதுக்கப்பட்ட மான்யம் மற்றும் கடன் தொகை முழுவதுமாக செலவழிந்து விட்டபின், மேலும் நிதி ஒதுக்கீடு தேவையானால் அதனை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் அனுமதியுடன் அரசிடமிருந்து மான்ய தொகையோ அல்லது உள்ளாட்சி சொந்த நிதியை பெற்ற பின்புதான், தொகையை பெற்று செயலாக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பிற நிதிகளிலிருந்து (ஊரகப்பகுதி திட்டங்கள் நிதி, பராமரிப்புக்கான நிதி மற்றும் பிற நகர திட்டங்களக்கான நிதி) இத்தொகை ஒதுக்கப்படக்கூடாது.

(ஊ) நகர்புறத் திட்டங்களின் செலவு சம்பந்தமான அறிக்கை திட்ட வாரியாக காலாண்டுக்கு ஒரு முறை வாரிய கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும். இதே அறிக்கை சம்பந்தப்பட்ட துறை தலைவர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

(எ) திட்டம் முடிந்தபின், அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்குகளை தணிக்கை செய்யப்பட்ட பின்பு திட்டத்தில் சொத்து மற்றும் பொறுப்புகள் போன்றவை நகர உள்ளாட்சிக்கு மாற்றப்படும் வரை கணக்குகள் தனியாக பராமரிக்கப்பட வேண்டும்.

(VIII) திட்டம் முடிந்த பின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்:

(அ) திட்ட செயலாக்கம் முடிந்த பின் திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், அதன் மீதான கடன் தொகை, திட்ட செயலாக்க காலத்தில் ஏற்பட்ட வட்டித் தொகை ஆகியவற்றை உள்ளாட்சி அமைப்பிற்கு வாரியம் உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்கண்டவையாகும்.

(i) திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மற்றும் வரைபடங்களின் நகல்

(ii) திட்டத்தின் குடிநீர் ஆதாரம் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் பற்றிய விவரங்கள்

(iii) திட்டத்திற்கு செலவு செய்ப்பட்ட மொத்த தொகை

(iv) திட்டத்தின் மூல அளிக்கக்கூடிய புதிய குடிநீர் இணைப்புகள் (இவை தெருக்கள் வாரியாக தொகுத்து அளிக்கப்பட வேண்டும்)

(v) திட்டத்தில் ஏற்படுத்தியுள்ள சொத்துக்களின் (Assets) அடிப்படையில் வருங்காலத்தில், உள்ளாட்சி அமைப்பு புதிய தெருக்களில் பகிர்மான குழாய்கள் அமைத்து கொள்ள வாய்ப்பு பற்றிய விவரம் (ஒவ்வொரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வாரியாக பயன் பெறக்கூடிய தெருக்களின் விவரம் அளிக்கப்பட வேண்டும்)

(ஆ) திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பெற்றுக் கொள்ளும் உள்ளாட்சி அமைப்பு அனைத்து விவரங்களுடன் வரைபடங்களும் இருக்கின்றனவா என்பதை சரிபார்து பெற்றுக் கொண்டு, திட்டச் சொத்தை தனது மூலதன பதிவேட்டில் (Asset Register) உடன் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர், கணக்காயர் மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் / பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பு ஏற்க வேண்டும். திட்டம் சம்பந்தமான வரைபடங்கள் மற்றும் பிற விவரங்கள் சம்பந்தப்பட்ட ஆணையரின் / செயல் அலுவலரின் வசம் இருந்தல் வேண்டும்.

(இ) குடிநீர்த் திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கும் போது பிரச்சனைகள் ஏதும் ஏற்பட்டால் அதனை நகராட்சி நிர்வாக ஆணையர்/பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழு தீர்த்து வைக்கும். எக்காரணத்தைக் கொண்டும் இப்பிரச்சனை இரண்டு மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்படக்கூடாது. பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு இத்திட்டம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க துறைத் தலைவர்கள் வழி வகுக்க வேண்டும்.

(IX) பராமரிப்பு:

(அ) கூட்டுக் குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரை அரசு ஆணைகளின்படி வாரியம் பராமரிக்க வேண்டுமென்பதால், அத்திட்டங்களின் பிரதான குடிநீர் குழாய்கள், நீர் ஆதாரக் கிணறுகள் போன்றவை மறுபடி பராமரிப்புக்காக வாரியத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வாரியம் நகர் மன்றத்திற்கு அளிக்க வேண்டிய மொத்த குடிநீரின் அளவு சரியாக கணிக்கப்பட வேண்டும். மொத்தமாக குடிநீர் வழங்கவேண்டிய பகுதிகளில் (Bulk Supply Points) அளவு மானி பொறுத்தப்பட்டு வாரிய மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் அதிகாரிகள் மாதந்தோறும் இதன் பதிவை எடுக்க வேண்டும். இதனடிப்படையில் தான் தண்ணீர் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

ஆ) தனித் திட்டத்தைப் பொறுத்தவரை அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பே அதனை முழுமையாக பராமரிக்க வேண்டும். பராமரிப்பதை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க கூடிய வாய்ப்புகள் ஆராயப்படலாம் இல்லையெனில் அரசாணை (நிலை) எண். 198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை, நாள். 26.10.98–ல் – குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி, தேவையின் அடிப்படையில் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கான செயற்குறிப்புகள் – திட்டம் முடியும் 6 மாதங்களுக்கு முன்பு துறை தலைவருக்கு அனுப்பி, ஆணைகள் பெற்று, தேவை அடிப்படையில் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(3) நகர்மன்றம் தானே செயலாக்கும் குடிநீர் திட்டங்கள்

(I) திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அரசு ஆணை பெறுதல்.

உள்ளாட்சி அமைப்பு தானாகவோ அல்லது கலந்தாலோசகர் மூலமாகவோ இதனை தயார் செய்து, அதனடிப்படையில் திட்டத்திற்கான நிதியாதாரம், தேவையான மான்யம், புதிய கட்டணம், வைப்புத் தொகை விவரங்களுடன், உள்ளாட்சி மன்ற தீர்மானத்துடன், நகராட்சி நிர்வாக ஆணையர் அல்லது பேரூராட்சி இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். மான்யத்திற்கான பிரேரணைகள் இதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அரசாணை (3டி) எண். 19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி3) துறை, நாள். 3.3.99 ஒப்புதலுடன் அனுப்பப்பட வேண்டும்.

(II) திட்ட செயலாக்கம்

உள்ளாட்சி மன்றம் திட்டத்தை நேரிடையாகவோ, அல்லது கலந்தாலோசகர் நிறுவனம் மூலமாகவோ, செயல்படுத்தலாம். திட்ட செயலாக்கத்தின் போது கீழ்க்கண்டவைகள், தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

(அ) திட்ட செலவு அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு மேல் செல்லக் கூடாது.

(ஆ) திட்ட செயலாக்கக் காலம் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(இ) திட்டத்திற்கு தேவையான அனைத்து மனைகளையும் உள்ளாட்சியின் கையில் இருத்தல் வேண்டும். (ஒப்பந்த புள்ளிகள் கோருவதற்கு முன்பு)

(III) திட்ட கணக்குகள்

இவை தனியாக பராமரிக்கப்பட வேண்டும். திட்டத்திற்காக பெறப்பட்ட மான்யம் / கடன் நிதிகள் வேறு எந்த செலவினத்திற்கும் பயன்படுத்தப்படக் கூடாது.

(IV) பராமரிப்பு

பராமரிப்பு போன்றவைகள் மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் கையாளப்பட வேண்டும்.

3. இவ்வாணை நிதித்துறையின் அலுவக சார்பற்ற குறிப்ப எண். 149/எஸ்எஸ் (ஜிவி)/ 2001, நாள் 2.3.2001 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு. மாலதி**

அரசு செயலாளர்